# முன்னுரை

பழந்தமிழர் நாகரிகத்தையும் பண்பாட்டையும் பழந்தமிழகத்தின் பல்வேறு சிறப்புகளையும் எடுத்துரைப்பன திருக்கோயில்களாகும். பழந்தமிழரின் பண்பாட்டுச் சின்னமாகவும் தமிழர்களின் நாகரிக எல்லைக்கு உயர்வினைத் தருவனவாகவும் விளங்குவன பழந்தமிழர்களின் அடையாளமான திருக்கோயில்கள்.

நம் தமிழகத்தில் காணப்படும் கோயில்கள், நம்முடைய வரலாற்றுத் தடயங்களாகவும், பண்பாட்டினை வெளிப்படுத்தும் இடங்களாகவும் வறுமை, பெருவெள்ளம் போன்ற காலங்களில் மக்களின் புகலிடமாகவும் திகழ்வன. மக்களின் வாழ்க்கையைச் செம்மைப்படுத்தும் சமூகக் கூடங்களாகவும் விளங்கி வருகின்றன.

கண்ணையும் கருத்தையும் கவர்ந்து மன மகிழ்வூட்டும் கலைக் கூடங்களாகவும் தமிழகத் திருக்கோவில்கள் விளங்குகின்றன. பண்டைக் காலத்தே நிலங்களின் அடிப்படையில் தெய்வங்களை வணங்கும் முறை அமைந்திருந்தது என்பதனைத் தொல்காப்பியத்தின் "மாயோன் மேய..." என்று தொடங்கும் நூற்பா வழியே காணலாம். திணை சார்ந்த தெய்வங்களுக்குக்காக அமைக்கப்பட்ட கோயில்கள் வெட்டவெளியில் மரங்களையே கூரையாகக் கொண்டு உருவாயின. கால வளர்ச்சியால் கல், மண், சுண்ணாம்பு போன்றவற்றால் அவை கட்டப்பெற்று, கற்சிற்பங்களாக மலர்ந்து கண்ணைக் கவரும் அழகிய மாடங்களோடு வானுற உயர்ந்து நிற்கின்ற காட்சி நம் தமிழகத்தின் பெருமையினைப் பறைசாற்றுவதோடு கலைகள்மேல் மக்கள் கொண்டிருந்த அளவற்ற ஆர்வத்தையும் சுட்டி நிற்கின்றன.

மனித வாழ்க்கைக்கு உரிய அனைத்தும் கலைகளே எனில் மிகையன்று. உணவு, வணிகம், பண்ட மாற்றம், மருத்துவம், உணவு படைத்தல், தச்சுத்தொழில், பொற்கொல்லர் தொழில், மண்பாண்டத் தொழில், கருமான் தொழில், மீன்பிடித்தொழில், ஆடு மாடுகள் மேய்த்தல், அழகுபடுத்திக் கொள்ளுதல், தையல் வேலைகள், சலவை செய்தல், சவரத் தொழில், கட்டடம் கட்டும் தொழில் போன்ற அனைத்தும் கலைகள் சார்ந்தவையே. இத்தகைய கலைகள், நுண்கலைகளுள் அடங்கும் என்பர் மயிலை சீனி. வேங்கடசாமி.

தமிழர்கள் வளர்த்த இத்தகைய அழகுக் கலைகள் யாவும் மக்களால் பொழுதுபோக்காகவும், தொழிலாகவும் நிகழ்த்தப்பட்டன. மனிதர்களின் வாழ்க்கைக்குத் தேவையான தொழில்களின் வளர்ச்சியும், வளர்ச்சியின் அடிப்படையில் தேவையும் முன்னின்றன. உணவு, இருப்பிடம், உடை, கல்வி, செல்வம் முதலியவற்றால் வளர்ச்சி பெற்று, நாகரிகமாக வாழக் கற்றுக் கொண்ட மனிதன் உண்டு, தொழில்கள் பல புரிந்து வருவாயைப் பெருக்கிக் கொண்டதோடு அமையாது மன அமைதியை நாடுவதற்குப் போதுமான கலைகளைப் பற்றி அறிந்து கொள்ளவும் ஆர்வம் காட்டினான்.

மனிதர்களுடைய மனத்து உணர்வுகளை உள்ளடக்கி அழகையும் இன்பத்தையும் அளிப்பன அழகுக் கலைகளாகும். மனிதன் தன்னுடைய அறிவின் திண்மையாலும், கற்பனையாலும் கவின் கலைகளைப் படைத்து அக்கலைகள் வழியே உணர்ச்சியைப் பெற்று அழகையும் இன்பத்தையும் உணர்ந்தான்.

அழகுக் கலைகள் மக்களின் மன எழுச்சியைத் தூண்டி அழகுக் காட்சியையும், இன்பக் காட்சிகளையும் தந்து மகிழ்விப்பதனால் உலக அளவில் நாகரிகமடைந்த மக்கள் நுண்கலைகள் மீது மிகுதியும் ஆர்வம் கொள்கின்றனர்; அக்கலைகளையும் போற்றி வளர்க்கின்றனர். இத்தகைய

அழகுக் கலையினை நற்கலை, கவின்கலை, இன்கலை, அழகுக் கலை எனப் பாகுபடுத்துவர். இவை கட்டடம், சிற்பம், ஓவியம், இசை, காவியம் என்னும் ஐந்தனுள் அடங்கும்.

இத்தகைய அழகுக் கலைகள் மனித நாகரிகத்தின் பண்பாட்டின் சின்னமாக விளங்குகின்றன. நாகரிகம் பெற்ற மனிதர்கள் எங்கெங்கு வாழ்கிறார்களோ அங்கெல்லாம் அழகுக்கலைகள் வளர்க்கப்படுகின்றன. அழகுக்கலையின் அடிப்படையான தன்மை எல்லா மக்களுக்கும் பொதுவாக இருந்த போதிலும் இக்கலைகள் அனைத்தும் ஒரே விதமாக இல்லாமல் வெவ்வேறு நாடுகளில் வெவ்வேறு வகையில் வளர்ந்துள்ளன.

கண்ணால் கண்டு இன்புறக் கூடிய கலைகளுள் கட்டடக் கலையும் ஒன்றாகும். கோயில்கள் மாடமாளிகைகளின் கட்டட அமைப்புகள் காட்சிக்கு இன்பம் தருகின்றன. கட்டடக் கலையைத் தொலைவான இடத்திலிருந்தும் கண்டு ரசிக்கமுடியும். வீடுகள், மாளிகைகள், அரண்மனைகள் முதலியவை கட்டடக்கலையை எடுத்துரைப்பன. இத்தகைய அழகுக் கலைகளுள் ஒன்றான கட்டடக் கலைக்குப் பெரும்பங்களிப்பைத் தமிழகத் திருக்கோவில்கள் வழங்கியுள்ளன.

## இலக்கியச் சான்றுகள்

ஆதிகாலத்தில் செங்கல், மண், மரம், சுண்ணாம்பு முதலிய பொருள்களைக் கொண்டு கோயிற் கட்டடங்களைக் கட்டினார்கள். இதற்கு அகநானூற்றில் கடியலூர் உருத்திரங்கண்ணனார் பாடலே சான்றாகும்.

***இட்டிகை நெடுஞ்சுவர் விட்டம் வீழ்ந்தன***
***மணிப்புறாத் துறந்த மரம்சோர் மாடத்து***
***எழுதணிகடவுள் போகலிற் புல்லென்று***
***ஒழுகுபலி மறந்த மெழுகாப் புன்திணை***

என அகநானூறு (167)குறிப்பிடுகிறது.

கோச்செங்கணான் என்ற சோழ மன்னன் சிவனுக்கும், திருமாலுக்கும் எழுபத்தெட்டுக் கோயில்களைக் கட்டினான், இதனை,

*பெருக்களுறு சடைக்கணிந்த பெம்மான்சேரும்*
*பெருங்கோயில் எழுவதினோடெட்டும் மற்றும்*

***(திருஅடைவுத் திருத்தாண்டகம் 5)***

என்று திருநாவுக்கரசர் கூறுவதிலிருந்து அறிந்து கொள்ளலாம். செங்கணான் அமைத்த எழுபத்தெட்டுக் கோயில்களும் செங்கற் கட்டடங்களே. அந்தக் கோயில்கள் பல மாடக் கோயில்களாகவும், அமைந்திருந்தன, இரண்டு நிலைகள் மூன்று நிலைகள் கொண்ட கோயில்களும் கட்டப்பட்டன. செங்கற்கள் இல்லாமல் மரங்களாலும் கோயில்கள் எழுந்தன.

மழை, வெயில் போன்றவற்றைத் தாங்கிடும் வகையில் செப்புத்தகடுகளைக் கூரைகளாக்கியும் கோயில்களை அமைத்தனர். கோயில்களின் விமானங்கள் யாவும் செப்புத்தகடுகளையும், பொன் தகடுகளையும் கொண்டதாகக் கோயில்கள் எழுந்தன.

மரக்கட்டிடங்களாக இருந்த கோயில்கள் பிற்கால அளவில் கற்றளிகளாக மாறத்தலைப்பட்டன. பாறைகளைக் குடைந்து குகைக் கோயில்களைப் பல்லவர்கள் அமைத்தனர். முதன் முதலில் மகேந்திரவர்மனே குகைக்கோயில்களைக் கட்டுவித்தான் என்று மண்டகப்பட்டுக் கல்வெட்டுக் குறிப்பிடுகிறது.

செங்கல், சுண்ணாம்பு, உலோகம் இல்லாமல் பிரம்மன் விஷ்ணு தெய்வங்களுக்கு விசித்திர சித்தன் என்னும் அரசன் கோவில் கட்டினான் என்று கல்வெட்டுக் குறிப்பிடுகிறது.

## குகைக்கோயில்கள்

கி.பி. ஏழாம் நூற்றாண்டில் திருநாவுக்கரசர் வாழ்ந்த காலத்தே ஆட்சி செய்தவன் மகேந்திரவர்ம பல்லவன். இவனே குகைக் கோயில்களைப் (பாறைக்கோயில்கள்) பாறையைச் செதுக்கித் தூண்களையும் முன் மண்டபத்தையும், அதற்குள் கருவறையையும் அமைக்கும் புதிய முறையையும் தோற்றுவித்தான். அவனுக்குப் பின்னர் வந்த நரசிம்மனும், பரமேஸ்வர வர்மனும் பல குகைக் கோயில்களைக் கட்டுவித்தனர்.

## கற்றளிகள்

கி.பி. ஏழாம் நூற்றாண்டில் இராஜசிம்மன் காலத்தில் கற்றளிகள் அமைக்கும் முறை ஏற்பட்டது. கருங்கற்களை ஒன்றன் மேல் ஒன்றாக அமைத்து, சுண்ணம் சேர்க்காமல் இக்கட்டடங்கள் கட்டப்பட்டன. மாமல்லபுரத்தில் உள்ள கடற்கரைக் கோயிலும் பனமலை என்னும் ஊரில் உள்ள கற்கோயிலும் முதன் முதல் அமைக்கப்பட்ட கற்கோயில்களாகும்.

கற்றளிகளாக அமைந்து இன்றும் வழிபாட்டிலுள்ள பல்லவர் காலத்து மாடக்கோயில்கள் இப்போதும் இருக்கின்றன. அவ்வகையில் காஞ்சியிலுள்ள விண்ணகரமும் சான்றாகும். இதனை வைகுண்டப் பெருமாள் கோயில் என்று வழங்குகின்றனர். மற்றொரு மாடக்கோயில் உத்திரமேரூரில் உள்ளது. சுந்தரவரதப் பெருமாள் கோயில் என்று குறிப்பிடும் இம்மாடக் கோயிலும் மூன்று நிலை அமைப்பைக் கொண்டது.

## கோயில் கருவறை

இறைவன் இருக்கும் மூலத்தானம், கருவறை என்றழைக்கப்படும் வழக்கமுள்ளது. இதனை அகநாழிகை அல்லது உள்நாழிகை என்றும் அழைப்பர். அகநாழிகைக்கு முன்பு மண்டபமும், கருவறையின் மேல்

அடுக்குகள் அமைந்த விதானங்களும் சோழர் காலக் கோயில்களில் கட்டப்பட்ட தனிச்சிறப்புக் கொண்டதாக அமையும். அகநாழிகையையும் மண்டபத்தையும் இணைக்கும் பகுதியை  இடைநாழிகை, அர்த்தமண்டபம் என்பர். கடவுள் உருவம் அமைந்திருக்கும் கருவறைப் பகுதியில் சைவக் கோயில்களாய் இருப்பின் கருவறைக்கு உள்ளே நுழையும் பகுதியில் இடப்பக்கத்தே விநாயகர் தனியே கோட்ட தெய்வமாக இருப்பது பெரும்பாலான கோயிலில் காணப்படும் ஒன்றாகும். கருவறையின் தென்பகுதியில் தட்சணாமூர்த்தியும், மேற்கில் லிங்கோத்பவரும், வடக்கில் துர்க்கையும் அதனருகே சண்டிகேசுவரர் சந்நிதிகளும் இடம் பெற்றிருக்கும்.

கருவறையின் உச்சிப்பகுதிக்கு விமானம் (விதானம்) என்று பெயர் வழங்குகிறது. பொதுவாக விமானப்பகுதி ஆறு உறுப்பினைக் கொண்டதாக அமைவது சிறப்பு. விமானத்தின் உறுப்புகளாக கால், உடல், தோள், கழுத்து, தலை, முடி என்பவை அமைகின்றன.

கோயில் அமைப்பினை வைத்தே இக்கோயில் பல்லவர் காலத்துக் கோயில் எனவும், சோழர் காலத்துக் கோயில் எனவும், நாயக்கர் காலத்துக் கோயில் என்றும் வகைப்படுத்தி விடலாம்.

பாறைகள் குடையப்பட்டுக் கோயிலாக அமைந்தவை சிங்கவரம், மாமல்லபுரம் போன்றவைகளாகும். சோழர்காலக் கோயில்களாக இருப்பின் கோயில் கருவறை முன் நூற்றுக்கால் மண்டபம், ஆயிரங்கால் மண்டபம் போன்ற அமைப்புகள் காணப்படும். நாயக்க மன்னர்கள் காலத்திய கோயிலாக இருப்பின் சிற்பக்கலை செழிப்புற்றிருக்கும் என்பதனை வைத்து அடையாளப்படுத்த முடியும்.

## கோயில் சிற்பங்கள்

தமிழகத்துக் கோயில்களில் கருவறை முன்மண்டபத்திலும் தூண்களிலும் சிற்ப உருவங்களைக் காண இயலும். வேலூரில் உள்ள ஜலகண்டேசுவரர் கோயில் தூண்கள் முழுமையும் சிற்பங்களால் அமைந்துள்ளமையைக் காணலாம். தூண்களில் தாமரை வடிவங்கள் போன்ற வடிவங்களும் சிற்பமாக அமைந்துள்ளமையைக் காணலாம். சிற்ப உருவங்கள் இல்லாத கோயில்கள் தமிழகத்திலேயே இல்லை என்று துணிந்து கூறுமளவிற்குத் தமிழர்களின் கலை உணர்வு மிளிர்வதை இன்றும் காணமுடியும். தெய்வ வழிபாட்டிற்குரிய இடங்களாகவும் சிற்பக் கலைக் கூடங்களாகவும் கோவில்கள் அமைக்கப்பட்டுள்ளமைக்குக் குடந்தை நாகேசுவரன், மதுரை மீனாட்சியம்மன், பாளயங்கோட்டை அருகிலுள்ள கிருஷ்ணாபுரம் சிலைகளே சான்றாக அமைகின்றன.

## கோயிலில் உருவ வழிபாடு

தமிழகத்தில் சிறு தெய்வங்களாகக் காக்கும் தெய்வங்களாக ஐயனார், காளி கோயில்கள் தொடக்க கால முதல் இடம் பெற்ற நிலையில், செங்கற்களை நட்டு வைத்து அங்குத் தெய்வம் இருப்பதாக வழிபட்டனர். அத்தெய்வத்தைக் காக்க அருகில் மரங்களை நட்டனர். அம்மரங்களே தல வரலாறுகளில் தல விருட்சங்கள் என்ற பெயரைப் பெற்றன.

கருவறைகள் உள்ள கோயில்கள் செங்கற்களாலும், கருங்கற்களாலும் அடுக்கிக் கட்டப்பட்ட நிலையில் அக்கோயில் முன்பக்கம் தூண்களோடு கூடிய மண்டபம் எழுந்தது. மண்டபத்தின் முன் நந்தி, பலிபீடம் இடம்பெற்றன. பிற்கால அளவில் கொடி மரங்கள் அமைந்தன. பெரும்பாலான கிராமதேவதைகள் வழிபடும் கோயில்களில் சிலைக்குப் பதிலாக வேலை வழிபடும் வழக்கமும் இருந்தது. பெரும்பாலான

முருகக்கடவுளின் கோயில்களில் உருவங்கள் வைக்கப்படாமல் முருகக் கடவுளின் அடையாளமாக வேலுக்கு வழிபாடுகள் நடைபெற்றன. சிவனார் கோயில்களில் சூலாயுதத்தை வைத்து மக்கள் வழிபடலாயினர். நாளடைவில் லிங்கவழிபாடு வழிபடு கடவுளாயிற்று, பெரும்பாலும் கோயிலில் சக்கரத்தை வைத்து வழிபடும் வழக்கமிருந்ததைக் குடந்தைச் சக்கரபாணி கோயில் சான்றாகக் காட்டுகிறது.

## இயற்கையே தெய்வம்

ஐவகை நிலங்களின் அமைப்பில் பண்டைத் தமிழ் மக்கள் தங்கள் வழிபாட்டிற்குரிய தெய்வ உருவங்களை அமைத்துக் கொண்டனர். சங்ககாலத்தும் சங்க காலத்திற்கு முற்பட்ட காலத்தும் நிலங்களின் அடிப்படையில் திணைக்குரிய தெய்வங்களை வணங்கும் முறைமை காணப்பட்டது. அவ்வகையில் குறிஞ்சி நிலத்துக்குரிய தெய்வம் முருகன் என்றும், பாலை நிலக்கடவுள் துர்க்கை என்றும், மருதநிலத் தெய்வம் இந்திரன் என்றும், நெய்தல் நிலத்திற்குரிய தெய்வம் வருணன் என்றும், முல்லை நிலத் தெய்வம் திருமால் என்றும் பெயர் வைத்து வழிபாடுகள் நிகழ்த்தினர்.

தமிழ்க்காப்பிய வரிசையில் சிலம்பை இயற்றிய இளங்கோவடிகள் மழை, ஞாயிறு, திங்கள் மூன்றையும் தெய்வங்களாக்கி நூலைப் பாடியுள்ளது குறிப்பிடத்தக்கது.

மூவேந்தர்களுள் சோழ மன்னர்கள் கோயிற்கலைக்குப் புத்துயிர் ஊட்டினர். சோழமன்னர்கள் பலரும் சைவம் சார்ந்தவர்களாகவே காணப்பட்டனர். அவர்களின் பெயர்களுள் ஒன்றினையோ மன்னர்களின் பெயர்களுள் ஒன்றையோ கோயிலுக்குரிய பெயராக வைத்தனர் என்பதனைப்

பிற்காலச் சோழர்கள் வரலாற்றில் சதாசிவப் பண்டாரத்தாரும் குறிப்பிட்டுள்ளார்.

## வரலாற்றுப் பின்னணி

நாகரிகம் பெற்ற மக்களாயினும் அவர்களிடம் காணப்பட்ட அழகுணர்ச்சி அழகுக் கலைகளை வளர்க்கப் பெரிதும் துணைபுரிந்தன. தன் அழகியல் உணர்வுகளைப் பல்வேறு கலைகள் வழியாகவும் வெளிப்படுத்தினர்.

இன்றைய நாளில் மறுமலர்ச்சி என்ற அளவில் கலைகள் மறக்கப்பட்டு வருகின்ற நிலையில் அழகுக் கலையாம் கோயில் கலையை அறியச் செய்திடல் வேண்டும்.

உலக அளவில் மனிதன் தோன்றிய நாள் முதலாகவே அவனிடம் தெய்வ நம்பிக்கையும், இறைப்பற்றும் மிகுந்தமையால், தான் விரும்பும் கடவுளர்க்குக் கோயில்கள் அமைத்து வழிபட வேண்டும் என்ற எண்ணம் தோன்றியிருக்க வேண்டும்.

கதிரவன், விண்மீன், நிலவு, நிலம், நீர், தீ, காற்று இவை இல்லையேல் மனிதவாழ்க்கையே இல்லை. மனிதன் தான் நல்வாழ்வு வாழ வேண்டி இறைவனை வணங்கத் தொடங்கினான். தான் விரும்பும் உருவத்தை இயற்கைக்கு அமைத்து அவற்றிற்குக் கோயில்களை அமைத்தான், சக்தியாகிய அம்மனுக்கு வழிபாடு செய்தமையால் அம்மன் வழிபாடு தோன்றியது.

திணை அடிப்படையிலும், தொழில் சார்ந்தும் இந்திரன், கண்ணன், இராமன், புத்தர், மகாவீரர் போன்றோர் நம்மிடையே தெய்வங்களாயினர். தெய்வங்கள் தோன்றிய பகுதி புண்ணிய பூமியாகக் கருதப்பட்டது.

இத்தெய்வவழிபாடும் அவர்களின் தோற்றமும் புராண இதிகாசங்களாக உருப்பெற்றன.

## பழங்காலக் கோயில்கள்

கோயில்கள் மண் உருவத்தால் அமைந்து அவை பழுதாகாமல் இருக்க மரத்தால் வடிவமைக்கப்பட்டு, பின்னர் கல்லால் கோயில் அமைந்தன. பழங்காலத்தே செஞ்சடைக் கடவுளான சிவனுக்கும், திருமாலுக்கும், முருகனுக்கும் கோயில்கள் இருந்தன என்பதற்குச் சங்க இலக்கியங்கள் சான்றாகத் திகழ்கின்றன.

புறநானூற்றில் சிவனுக்கு இருந்த கோயில்களைப் பற்றியும், சிலம்பில் திருமால், முருகன், பலராமன் ஆகியோருக்கும் கோயில்கள் இருந்தன என்பதற்கும் சான்றுகள் உள்ளன.

திருமுருகாற்றுப்படை, பரிபாடல் போன்ற சங்க இலக்கியங்கள் கடவுள் வழிபாட்டு முறைகளைக் குறிப்பிடுவதைக் காண முடிகிறது.

மனை நூல் மரபறிந்து கோயில்கள் அமைக்கும் நூலறி மக்கள் இருந்தனர். அவர்களால் அமைக்கப்பட்ட கோயில் மதுரை, காஞ்சி, திருவேங்கடம், திருவாவினன்குடி, திருச்சீரலைவாயில், திருப்பரங்குன்றம், பழமுதிர்சோலை, திருவரங்கம், திருவனந்தபுரம் முதலான இடங்களில் அமைந்துள்ளன.

தமிழர் தம் பண்பாட்டையும், வரலாற்றையும் வரலாற்று வழியே கண்ட உண்மைகளையும் தாங்கியே தமிழகக் கோயில்கள் அமைந்துள்ளன. கட்டடக்கலை, சிற்பக்கலை, ஓவியக்கலை என்னும் மூன்று கலைகளும் ஒன்றாகச் சங்கமிக்கும் கோயில்கள் வரலாற்றுச் சிறப்பையும் பண்பாட்டையும் நிலைக்களன்களாகக் கொண்டுள்ளன.

## கோயிற் கல்வெட்டுகள்

கோயில்கள் மன்னர்கள் உதவியால் மக்களின் உழைப்பினால் போற்றப்பட்டுப் பழமையைக் காப்பாற்றி வருகின்றன. இக்கோயில்கள் பற்றிய தரவுகளை அறிய, கோயில்களில் அமைந்திருக்கும் கல்வெட்டுகளே சான்றாக அமைகின்றன.

இடைக்காலத்தே மக்கள் தங்கள் சமய, சமுதாய வாழ்க்கையினைச் செம்மையுறச் செய்ததும் கோயில்களே ஆகும்.

கிராமப்புற ஆட்சியமைப்பு, வழிபாடு, விழாக்கள் செம்மையுற அமைந்திடக் கோயில்களே துணைநின்றன. சமய வளர்ச்சிக்கும் பொருளாதார வளர்ச்சிக்கும் கோயில்களே துணையாக அமைந்தன.

## தலவிருட்சங்கள்

தொடக்கக்காலத்து கோயில்கள் அமைந்த இடங்களில் நிழலுக்காக வைக்கப்பட மரங்கள் பின்னாளில் அக்கோயிலின் தலவிருட்சமாகவும் அமைந்தன. தல விருட்சமே ஊர்ப் பெயராகவும் மாறியதற்குத் தில்லைவனம் என்ற சிதம்பரமே அடையளமாகும். அம்மரங்களும் மக்களால் வழிபடும் பொருளாகவும் மாற்றம் பெற்றன.

## ஆய்வு முன்னோடிகள்

திருக்கோயில்களின் வரலாறுகள், தொன்மை, பழமை, நம்பிக்கைகள், சடங்குகள், மக்களின் பழக்கவழக்கங்கள் யாவும் திருக்கோயில்கள் பற்றிய ஆய்வினை நிகழ்த்த வேண்டும் என்ற சிந்தனையை என்னுள் தூண்டின. சென்னை மாநகர் முழுமையும் கோயில்களாகவே தென்பட்ட நிலையிலும் இறைநம்பிக்கை பற்றிய நூல்களைப் பயின்ற நிலையிலும் திருக்கோயில்கள் பற்றிய ஆய்வு நிகழ்த்த

வேண்டும்; அத்துடன் நேரில் கள ஆய்வு செய்து ஆய்வுப்பணிகளைச் செய்ய வேண்டும் என்ற எண்ணமும் என்னுள் தீவிரமாக எழுந்தது.

கோயில்கள் பற்றிய ஆய்வுகளாக நெல்லையப்பர் கோயில் ஆய்வு, திருக்குடந்தை சாரங்கபாணிக் கோயில்ஆய்வு, திருக்குடந்தை சைவக்கோயில்கள் ஆய்வு, சென்னைக் கபாலீசுவரர் கோயில் ஆய்வு, சிங்கவரம் கோயில் ஆய்வு, மயிலைக்காரணீசுவரன் கோயில் ஆய்வு, மருந்தீசுவரர் கோயில் ஆய்வு, திருமயிலைக் கோயில்கள் பற்றிய ஆய்வுகள் போன்றவை, கோயில்கள் பற்றிய முன்னோடி ஆய்வுகளாக அமைந்த நிலையில் சென்னையை எல்லையாகக் கொண்டு கள ஆய்வு வழியே ஆய்வு செய்ய விழைந்தே தலைப்புத் தேர்வானது.

## ஆய்வு எல்லை

தமிழகத்தில் குறிப்பாகச் சென்னையில் உள்ள சிவத்தலங்கள் இந்த ஆய்வுக்கு எல்லையாக அமைகின்றன. தேவாரத் திருமுறைகளில் பாடப்பெற்ற சிவத்தலங்களும் தேவாரத் திருமுறைகளில் வைப்புத் தலங்களாக அமைந்த கோயில்களும் இந்த ஆய்வின் எல்லையாகும்.

## ஆய்வின் நோக்கம்

1. சென்னையில் காணப்படும் கோயில்களில் இடம்பெற்றுள்ள புராணச் செய்திகள், மன்னர்களின் ஆட்சிமுறை முதலானவற்றைத் தரவுகள் வழியே காணல்.
2. கோயில்களின் பொதுவான அமைப்புமுறையைக் காணல்.
3. கோயில்களில் இடம் பெற்றுள்ள இறைத்திருமேனி, கருவறை, கருவறைக்கு வெளிப்புறப்பகுதிகள் முதலான அமைப்பு முறையை உணர்த்தல்.

4. கோயில்கள் சமுதாய உறவுநிலைகளுக்குத் துணைநிற்கும் தன்மையை வெளிப்படுத்தல்.

5. மன்னர்கள் ஆட்சியிலும், தற்கால அளவிலும் கோயில்கள் கட்டப்பட்டும், மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டும், புனரமைப்புகள் செய்யப்பட்டும் உள்ளவற்றையும் கண்டறிதல்.

6. கோயில்களின் திருவிழாக்கள், கோயில்கள் வழியில் மக்கள் கொண்டுள்ள இறைநம்பிக்கை ஆகியவை சென்னை மாநகர்க் கோயில்களில் பின்பற்றப்படுவதான தரவுகளை நேரில் களஆய்வின் வழியே கண்டறிதல்.

## ஆய்வின் கருதுகோள்

தொண்டைமண்டலம் சான்றோர்களுடைத்து என்ற ஔவையின் அமுதமொழிக்கு அரணாகக் கோயில்கள் விளங்குகின்றன. இத்திருநாடாகிய சோழநாட்டின் ஆட்சிக்குட்பட்டிருந்த தொண்டை நாடு பற்றிய நிகழ்வுகள் வரலாற்றோடு தொடர்புடையன.

கரிகாலனுக்குப் பின்னர் வென்வேற்கிள்ளி என்னும் சோழ மன்னனின் மகன் தொண்டைமான் இளந்திரையன் காஞ்சியைத் தலைநகராகக் கொண்டு ஆண்டவன். அவன் பெயராலேயே இந்நாட்டிற்குத் தொண்டை நாடு என்னும் பெயர் ஏற்பட்டது. தொண்டைமான் இளந்திரையன் சோழர் மரபைச் சார்ந்தவன். அச்சோழர்கள் ஆட்சிக்காலமாகிய சங்ககால அளவிலேயே இந்தப்பகுதி சிறப்புற்றிருந்தது. இத்தகைய சோழ நாட்டின் ஆட்சி எல்லைக்கு உட்பட்ட தொண்டை நாட்டில் திருக்கோயில்கள் மிகுதியாக இருந்தமையால் பண்டைக்காலம் முதல் மக்கள் மிகுதியாகக் கோயில் பகுதியில் வாழ்ந்துள்ளனர்.

இவ்வாறு மக்கள் சேர்ந்து வாழ்வதற்கும் பண்பாட்டு வளர்ச்சிக்கும் கலை வளர்ச்சிக்கும் காரணமாகச் சென்னைத் திருக்கோயில்கள் அமைந்துள்ளன என்பது இவ்வாய்வின் கருதுகோளாகக் கொள்ளப்பட்டுள்ளது.

சென்னை நகரில் புகழ் பெற்ற கபாலீசுவரர், மருந்தீசுவரர், ஒற்றீசர் கோயில்கள் தொன்மையும், சிறப்பும் பெற்ற தலங்களாகவும், பாடல் பெற்ற திருத்தலங்களாகவும் அமைந்துள்ளன.

## ஆய்வுப் பொருள்

'சென்னையில் உள்ள சிவத்தலங்கள் – ஓர் ஆய்வு' என்பது ஆய்வுத்தலைப்புத் தேர்வாகும்.

## ஆய்வுப் பொருள் விளக்கம்

தமிழகப் பண்பாட்டு வளர்ச்சி நிலையில் பெரும்பங்காற்றுவன திருக்கோயில்களே ஆகும். இக்கோயில்கள் சமுதாயம், சமயம், இலக்கியங்கள், வரலாறு, கலை, வழிபாட்டு முறைகள் மற்றும் சமயம் தொடர்பான பல்வேறு விழாக்களின் கொள்கலனாய் விளங்குகின்றன. அவ்வகையில் சென்னை நகரை மையமாகக் கொண்ட சிவத்தலங்கள் மட்டும் இங்கே ஆய்வுப்பொருளாக எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

## ஆய்வின் அணுகுமுறை

சென்னையில் சிவன்கோயில்கள் பற்றிய ஆய்விற்க்கு தரவாக அமைவது களப்பணி முறையில் கண்டறியப்பட்ட ஆய்வுச் செய்திகளாகும். இதற்கு அரண் சேர்க்கும் வகையில் திருமுறைத் திருக்கோயில்களின் கல்வெட்டுச் செய்திகள், திருக்கோயில் பற்றிய ஆய்வு நூல்கள், கட்டுரைகள், மலர்கள் ஆகியவற்றை துணைமை ஆதாரமாக கொண்டு சமுதாய,

விளக்கவியல் ஆய்வு அணுகுமுறையில் கொண்டு ஆய்வு நிகழ்த்தப்பட்டுள்ளது.

## ஆய்வுப்பகுப்பு

இந்த ஆய்வேடு முன்னுரை, முடிவுரை நீங்கலாக ஐந்து இயல்களை உள்ளடக்கி அமைந்துள்ளது.

இயல் ஒன்று – சென்னை அமைப்பும் சிவன் கோயில்களும்

இயல் இரண்டு – சென்னையில் உள்ள தேவாரத் திருமுறைக் கோயில்கள்

இயல் மூன்று – சென்னையில் உள்ள தேவாரத் திருமுறை வைப்புத்தலங்கள்

இயல் நான்கு – சென்னையில் உள்ள நவக்கிரகக் கோயில்கள்

இயல் ஐந்து – சென்னையில் உள்ள அடியார்கள் திருக்கோயில்கள்

## இயல் ஒன்று : சென்னை அமைப்பும் சிவன்கோயில்களும்

தொண்டை நாடு என்னும் பெயர் இப்பகுதிக்கு ஏற்பட்டதற்கான காரணமும், சென்னைப்பட்டணம் சென்னையாகத் தோன்றிய வரலாற்றுப்பின்னணியும் இவ்வியலில் விளக்கப் பெற்றுள்ளன. சென்னையில் காணப்படும் சிவன்கோயில் எண்ணிக்கையும், அக்கோயில்களிலும் சைவ சமய நாயன்மார்களால் பாடல் பெற்ற சிவன்கோயில் எண்ணிக்கையும் இவ்வியலில் வரையறை செய்யப்பட்டுள்ளன.

## இயல் இரண்டு : சென்னையில் உள்ள தேவாரத் திருமுறைக் கோயில்கள்

சைவ சமய குரவர்கள் வாழ்ந்த காலத்தே காஞ்சிபுரமும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளும் தொண்டை நாடு என வழங்கப்பட்டன. அத்தொண்டை மண்டலத்திலுள்ள சிவன் கோயில்கள் பற்றிய செய்திகளை இந்த இயல் தருகின்றது.

பாடல் பெற்ற சிவத்தலங்கள் 274. அவற்றில் 32 சிவத்தலங்கள் தொண்டை நாட்டில் உள்ளன. தொண்டை மண்டலத்திலுள்ள சிவத்தலங்களில் சென்னையில் பாடல் பெற்ற சிவத்தலங்கள் ஆறு.

(1) திருமயிலை

(2) திருவொற்றியூர்

(3) திருவான்மியூர்.

(4) திருமுல்லைவாயில் (வட)

(5) திருவலிதாயம்

(6) திருவேற்காடு

இத்திருக்கோயில்களின் அமைப்பும், சிறப்பும், வழிபாட்டு முறைகள் முதலானவையும் இவ்வியல் வழியே கண்டறியப்படுகின்றன.

## இயல் மூன்று : சென்னையில் உள்ள தேவாரத் திருமுறை வைப்புத் தலங்கள்

சென்னையில் உள்ள தேவாரத்திருமுறை வைப்புத்தலங்கள் என்பவை திருப்பதிகங்கள் முழுமையும் பெறாமல் அல்லது முழுமையும் கிடைக்கப்பெறாமல், பிற திருப்பதிகங்களில் பெயர் மட்டும் குறிக்கப்படும்

திருத்தலங்கள் வைப்புத்தலங்கள் என்று கூறப்படுவனவாகும். இவற்றில் தொண்டை நாட்டில் வைப்புத்தலங்களாக உள்ளவை பதின்மூன்று. சென்னை என்ற எல்லை வரையறையில் சென்னையில் தேவார வைப்புத்தலங்கள் மூன்று.

(1) திருவல்லிக்கேணி

(2) எழும்பூர்

(3) திருநந்திகேசுவரம்

என்னும் இம்மூன்றும் வைப்புத்தலங்களாக அமைந்துள்ளமை பற்றிய செய்திகள் இவ்வியலில் விளக்கம் பெறுகின்றன.

## இயல் நான்கு : சென்னையில் உள்ள நவக்கிரகக் கோயில்கள்

1. சூரியன்: கொளப்பக்கத்தில் அகத்தீசுவரர்
2. சந்திரன்: சோமங்கலம் சோமநாதீசுவரர்.
3. செவ்வாய்: பூந்தமல்லியில் பூவைத்தீர்ப்பரர்.
4. புதன் : கோவூரில் சௌந்தரேசுவரர்
5. குரு : போரூர் இராமநாதேசுவரர்
6. சுக்கிரன் : மாங்காடு வெள்ளீசுவரர்
7. சனி : பொழிச்சலூர் அகத்தீசுவரர்
8. ராகு : குன்றத்தூர் நாகேசுவரர்.
9. கேது : கெருகம்பாக்கம்: நீலகண்டேசுவரர் – இக்கோயில்களின் அமைவிடம், நவக்கிரகங்களை வழிபடுவதால் எத்தகைய பலன்கள் கிடைக்கும் என்பவை விரிவாகவும் விளக்கமாகவும் ஆராய்கின்ற இயலாக இவ்வியல் அமைந்துள்ளது.

## இயல் ஐந்து : சென்னையில் உள்ள அடியார்கள் திருக்கோயில்கள்

கள ஆய்வில் கண்டறிந்தபடி சென்னையில் அடியார்கள் சிறப்பிடம் பெற்ற திருக்கோயில்களாகப் பல கோயில்கள் உள்ளன. இக்கோயில்களில் மூலவராகச் சிவபெருமான் உள்ளார். வேளச்சேரி, கிண்டி, திருவொற்றியூர், மயிலை, திருவான்மியூரில் அடியார்களுக்குத் தனிச் சன்னதிகள் உள்ளன. திருக்கோயில்களில் மூலவர் இல்லாமல் வள்ளலார் திருவுருவம் மட்டுமே அமைந்துள்ளமையும் இவ்வியலில் விளக்கப்பட்டுள்ளது. பதினெண் சித்தர்கள் பற்றிய சிறப்புடைய தகவலையும் தருகின்ற இயலாக இது அமைந்துள்ளது.

முடிவுரையில் ஆய்வில் கண்டறியப்பட்ட தரவுகளாகிய முடிவுகள் யாவும் தொகுத்துரைக்கப்பட்டுள்ளன. இறுதியில் துணைநூற்பட்டியலும், பின்னிணைப்பில் இன்றியமையாத தரவுகளோடு இறைத்திருமேனி படங்களும், கோயில்கள் பற்றிய படங்களும், கள ஆய்வின் அனுபவங்களும் தரப்பட்டுள்ளன.